Public Library
Jaffna

ISSN 1391-9504

# Vijey விஜய்
# விஜய்

14.02.2018 - மலர் 14, இதழ் 51

## இணையத்தை கவனமாக கையாள்வோம்



Public Library
Jaffna



## விண்வெளி வாசல்

நிஜங்களுடன் ஒரு கற்பனைப் பயணம்...

புதிய தொடர்கதை

இலங்கையின் தேசிய குறியீடுகள்



அரச சிறுவர் ஓவியப் போட்டி...

புதிய கார்ட்டூன் தொடர்...



உடல் வளர்ச்சிக்கு உதவும் உணவு வகைகள்

விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விலங்கின மிதவை நுண்ணுயிரிகள் வளர்ப்புக்கு நடவடிக்கை





நன்னீர் மீன்பிடி தொழிற்துறை சார்ந்த அலங்கார மீன் வளர்ப்பினை மேம்படுத்தி, அலங்கார மீன்களுக்கு தேவைப்படும் உணவான விலங்கின மிதவை நுண்ணுயிர்களின் வளர்ப்புக்குத் தேவையான உயிர் ஆகாரங்களை உற்பத்தி செய்வதற்கு மீன்பிடி மற்றும் நீர்வளங்கள் அமைச்சு தீர்மானித்துள்ளது.

அதன்படி, அலங்கார மீன்களின் உணவாகப் பயன்படுத்தப்படும் 'டெஃப்னியா' எனும் ஒட்டுமீன்களை வளர்ப்பதற்கு தேசிய நீர்வாழ் வளர்ப்புகள் அபிவிருத்தி அதிகாரசபை நடவடிக்கைகளை எடுத்துள்ளது. இதற்காக, முன்வருவோருக்கு உற்பத்திச் செலவில் 50 சதவீத நிதியினை உதவியாக வழங்குவதற்கு அதிகாரசபை திட்டமிட்டுள்ளது. இலங்கையில் நன்னீர் மீன்பிடி தொழிற்துறைக்கான நீர்வாழ் வளர்ப்புகளின் அபிவிருத்திக்காகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

# உக்கிப்போகாத பொலிதீனை எரிப்பது கேடு தரும்!


## -மத்திய சுற்றாடல் அதிகாரசபை எச்சரிக்கை



உக்கிப்போகாத பொலிதீன், ஷொப்பிங் பேக், லஞ்ச்ஷீட்கள் என்பன வற்றை பாவனைக்கு உட்படுத்துதல், உற்பத்தி செய்தல் என்பன இலங்கையில் தடை செய்யப்பட்டுள்ளது. அத்துடன், உக்கிப்போகாத தன்மை கொண்ட பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக் என்பனவற்றை வீட்டுத் தோட்டத்தில் எரிப்பதும் தடைசெய்யப்பட்டுள்ளது. இவ்வாறு எரியூட்டினால் 2 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படும். அல்லது 10 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடப்படும்.



பொலிதீன் மற்றும் பிளாஸ்டிக்கினை எரிப்பதனால் இதய நோய்கள், புற்றுநோய்கள் ஏற்படுவது மட்டுமன்றி; சிலவேளைகளில் மரணமும் சம்பவிக்கலாம் என்பது மருத்துவர்களின் கருத்தாகும்.



எனவே, உங்கள் பாவனைக்காக இத்தகைய பொருட்களை வாங்குவதை தவிர்த்துக்கொள்ளுங்கள். கடைகளுக்கு செல்லும்போது சணல் மற்றும் துணியினாலான பைகள், மீள் பயன்பாட்டுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கப்பட்டுள்ள பைகளை எடுத்துச் செல்லப் பழகிக்கொள்வது உகந்தது. .

# கிங் ஓயா தொகுதி

## பாதுகாக்கப்பட வேண்டிய வலயமாக வர்த்தமானி அறிவிப்பு





கிங் ஓயாவானது, புத்தளம் மாவட்டத்தின் நாத்தாண்டிய பிரதேச செயலாளர் பிரிவிலிருந்து ஆரம்பமாகி வென்னப்புவ பிரதேச செயலாளர் பிரிவினூடாகப் பயணித்து வென்னப்புவ கம்மல் முகத்துவாரப்பகுதியூடாக கடலுடன் சங்கமமாகின்றது. இயற்கை சுற்றாடல் ரீதியில் கிங் ஓயா மிகவும் முக்கிய இடத்தை வகிக்கின்றது. இதனால், 1980 இல. 47 தேசிய சுற்றாடல் சட்டத்தின்கீழ் இதன் கரையோரப் பகுதி எல்லையிலிருந்து தெமட்டப்பிட்டிய பாலம் வரையிலான நீர்நிலை, அப்பகுதியில் அடங்கியுள்ள தீவுகள் மற்றும் கரையிலிருந்து 60 மீற்றர் வரையான தரைப் பகுதிகள் என்பன 'பாதுகாக்கப்பட வேண்டிய வலயம்' எனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன.

அழியும் அபாயத்தை எதிர்கொண்டுள்ள 'mangrove palm' எனும் கண்டல் தாவர வளர்ச்சிக்கு ஏற்ற இடமாகவும் இந்த வலயம் காணப்படுகின்றது. இது தவிர, மேலும் பல்வேறு கண்டல் பழ மரங்களும் இங்கு காணப்படுகின்றன.

சுற்றுலாப்பறவைகள் பலவற்றுக்கும் கிங் ஓயா தொகுதி இருப்பிடங்களை வழங்கி வருகின்றது. அத்துடன், ஊர்வன, மீனினங்கள், சவர்நீர் உயிரினங்கள், ஈரூடக வாழிகள் என்பனவற்றுக்கும் இந்த வலயம் இருப்பிடமளிப்பதோடு, இனப்பெருக்கத்திற்கான வசதிகளையும் வழங்குகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Public Library
Jaffna



# பாடசாலைகளில் உடல் ரீதியிலான தண்டனைகள் தொடர்கின்றன...

## சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிப்பு



பாடசாலைகளில் மாணவர்கள் மீது உடல் ரீதியிலான தண்டனைகள் வழங்கப்படுமாயின் அது குறித்து 1929 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக, அறியத் தருமாறு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சினால் 2016.04.29 ஆம் திகதி வெளியிடப்பட்ட 2016 இல 12 சுற்றறிக்கையின்படி, பாடசாலையினுள் ஒழுக்கப் பாதுகாப்பு அறிவுறுத்தலின்கீழ் உடல் ரீதியிலான தண்டனைகள் வழங்கப்படுவது தடைசெய்யப்பட்டிருப்பதாக மேற்படி அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது. இருப்பினும் சில பாடசாலைகளில் உடல் ரீதியிலான தண்டனைகள் வழங்கப்படுவது தொடர்பாக அண்மைக் காலங்களில் புகார்கள் கிடைத்துள்ளமையின் காரணமாகவே, இது விடயமாக மீண்டும் சுட்டிக்காட்டுவதாகவும் அதிகாரசபை தெரிவித்துள்ளது.



# சட்டத்திற்கு முரணான சர்வதேச பாடசாலைகள்

இலங்கையில் நிலவுகின்ற சட்டத்தின்படி, 05 தொடக்கம் 14 வயது வரையிலான பிள்ளைகளுக்கு தனியார் நிறுவனங்களால் நடத்தப்படுகின்ற சர்வதேச பாடசாலைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளக் கூடாது என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், நாடளாவிய ரீதியில் இவ்வாறான 214 சர்வதேச பாடசாலைகள் நடத்தப்படுவதாக இலங்கை ஆசிரியர்மார் சம்மேளனம் குற்றஞ் சாட்டியுள்ளது.

இது குறித்து கணக்காய்வு அறிக்கைகளிலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாகவும் மேற்படி சம்மேளனம் தெரிவித்துள்ளது. எனவே, அரசாங்கம் உரியவாறு கவனம் செலுத்தி இது விடயமாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

விஜய்
த.பெ.எண் 2037,
கொழும்பு.
தொலைபேசி 2479653
மின்னஞ்சல்: vijey@wijeya.lk
ஃபெக்ஸ்: 011-2479652

# "பாடசாலை சிற்றுண்டிச்சாலைகள் விதிமுறைகளை பின்பற்றுவதில்லை..."

## சுகாதாரத்துறை அமைச்சர் கவலை

பாடசாலைகளில் இயங்கும் சிற்றுண்டிச் சாலைகள் விதிமுறைகளை சரியான முறையில் பின்பற்றுவதில்லை என சுகாதாரத்துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார். இது குறித்து மேலும் தெரிவித்துள்ள அவர், "சீனி சேர்க்கப்பட்ட சிற்றுண்டிகளுக்கு 50 சதம் வரியாக செலுத்த வேண்டும் என முன்மொழியப்பட்டுள்ளது. அத்துடன் சீனி, உப்பு, கொழுப்பு ஆகியவை அடங்கிய உணவுப் பொருட்களை பிள்ளைகளுக்கு விற்பனை செய்யக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ள போதிலும்,



அவை ஒழுங்கான முறையில் பாடசாலை சிற்றுண்டிச்சாலைகளில் பின்பற்றப்படுவதில்லை. எனவே, இது குறித்து பெற்றோர் அவதானத்துடன் இருக்க வேண்டும்" எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

# உற்பத்தித் திறன் போட்டி விண்ணப்பம் கோரல்

தேசிய உற்பத்தித் திறன் செயலகத்தினால் நடத்தப்படும் தேசிய உற்பத்தித் திறன் போட்டிகளுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பான விபரங்களையும் விண்ணப்பப்படிவத்தையும் www.productivity.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ள முடியும். மேலும், தேசிய உற்பத்தித் திறன் தலைமைக் காரியாலயம், மாவட்ட செயலகங்கள், பிரதேச செயலகங்கள் ஆகிய இடங்களிலும் விபரங்களை பெற்றுக்கொள்ளலாம். மார்ச் 28 ஆம் திகதிக்கு முன்னர் போட்டிக்கான விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

புதிய தொடர்கதை

# விண்வெளி வாசல்

## நிஜங்களுடன் ஒரு கற்பனைப் பயணம்...



**அஷேன்:** குழுவின் தலைவன். திட்டம் தீட்டுவது, முடிவுகள் எடுப்பதில் வல்லவன். கம்ப்யூட்டர் கேம்ஸ் இவனது பிரதான பொழுதுபோக்கு.

**மனோஜ்:** நவீன தொழில்நுட்பமும், கருவிகளை இயக்குவதும் இவனுக்கு கை வந்த கலை. விஞ்ஞானபூர்வமாக சிந்திப்பவன். ஸ்பார்க் இவனது ரொபோ.

**ஆயிஷா:** காட்சியையோ, தரவுகளையோ நினைவில் வைத்துக்கொள்வதில் கில்லாடி. வரலாற்றை கரைத்துக் குடித்தவள். நிதானமாகச் சிந்திப்பவள்.

**பிரனிதா:** அனைத்துக் கலைகளும் அத்துப்படி. ஓவியங்கள் இவளது உயிர். குழுவின் ஒருங்கிணைப்பாளர். புதிர்களை தீர்ப்பதில் நாட்டம் அதிகம்.

**ஸ்பார்க்:** ஒரு காற்பந்தின் அளவையும், வடிவத்தையும் ஒத்த, எதிலும் பயணிக்கக் கூடிய, பேசக்கூடிய அதிமுன்னேற்றமான ரொபோ.

**வித்தகன்:** எப்படிப்பட்ட கருவியையும், மென்பொருளையும் உருவாக்கக் கூடிய வயதான விஞ்ஞானி. குழுவின் தகவல் வழங்குனர். ஆலோசகர்.

★★★★

அஷேனின் கண்கள் திரையை உற்றுப்பார்த்தபடி இருந்தன. புருவங்களை நெருக்கி, கவனம் சிதறாமல் அமர்ந்திருந்தான். அவனது விரல்கள் அசுர வேகத்தில் இயங்கிக்கொண்டிருந்தன. கொம்ப்யூட்டரில் அவனுக்கு மிக விருப்பமான game இனை விளையாடிக்கொண்டிருந்தான். விளையாட்டின் உச்சக்கட்டத்தில், அவன் அணிந்திருந்த கைக்கடிகாரம் ஒலி எழுப்பியது. ஓரக்கண்ணால் கைக்கடிகார திரையைப் பார்த்தான். "PR calling..." என்கிற வார்த்தைகள் கடிகாரத் திரையில் தென்பட்டன. அந்த நொடி-நேர பார்வை, அவனை விளையாட்டில் தோல்வியடையச் செய்தது. "Game Over" என்கிற வார்த்தைகள், ஒரு சோக இசையுடன் கணினியில் தென்பட, பெருமூச்சுடன், கடிகாரத்தில் இருந்த Project பட்டனை அழுத்தினான். உடனே அவன் கைக்கடிகாரத்தில்

### பயணம் - 01

இருந்து பல ஒளிக்கற்றைகள் எதிரே இருந்த சுவற்றை நோக்கிப் பயணித்தன. அங்கே பிரனிதாவின் முகம் தெரிந்தது. கூடவே ஓசையும் கேட்டது.

**பிரனிதா:** அஷேன், புது Project, நாளைக்கு 5 மணிக்கு வந்திரு.

ஆயிஷா படித்துக்கொண்டிருந்தாள். வழமை போல வரலாறு. 1666 ஆம் ஆண்டு லண்டனில் பரவிய 'பிளேக்' தொற்று நோய்தான், விஞ்ஞானி ஐசாக் நியூட்டன், கிராமத்தில் இருந்த தனது பாட்டி வீட்டுக்கு செல்லக் காரணமாக இருந்தது. அப்போது, அந்த பாட்டி வீட்டுத் தோட்டத்தில்தான் அவர் தலையில் ஆப்பிள் விழுந்தது என்கிற செய்தியை வாசித்துக்கொண்டிருந்தாள். தீமையிலும் ஒரு நன்மை நடந்திருக்கிறதே என்று அவள் சிந்தித்தபடி இருக்க, அவள் மேசை மீதிருந்த உலக உருண்டையிலிருந்து ஓசை கேட்டது. சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு, விரலை இலங்கை மீது வைத்து அழுத்தினாள். உருண்டை திறந்தது. உள்ளே ஒரு திரையில், முன்பு போலவே பிரனிதா தோன்றி, தகவலை சொன்னாள்.

மனோஜ் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தான். அவன் கனவில் ஒரு எண்ணிலக்க (digital) உலகத்தினுள் நுழைந்து கொண்டிருந்தான். திடீரென எங்கிருந்தோ ஒரு பாடல் கேட்டது. உடனே விழித்துக்கொண்டான். அவனுக்கு மேலாக ஸ்பார்க் அந்தரத்தில் மிதந்தபடி இருந்தது. அவனை விழித்துக்கொள்ள செய்வதற்கான ஸ்பார்க்தான் பாடலை ஒலிபரப்பி இருக்கிறது என அறிந்துகொண்டான்.

**மனோஜ்:** டேய்! அடி வாங்கப் போறெ!! என்ன விஷயம்!?

ஸ்பார்க் என்கிற உருண்டை வடிவான பறக்கும் ரொபோ, அதன் மேல் பகுதியில் பிரனிதாவின் முகத்துடன் "calling..." என்கிற செய்தி திரையில் ஓடியது. மனோஜ் தூக்கக் கலக்கத்துடன் ஆன்சர் என்றான்.

**பிரனிதா:** மனோஜ், புது ப்ரொஜெக்ட், நாளைக்கு 5 மணிக்கு மூன்றாவது முறையாக அதே தகவலை கூறினாள் பிரனிதா. மனோஜ் பதிலுரைத்ததும், தான் தொடர்பு கொள்ளப் பயன்படுத்திய கருவியை கைப்பையினுள் வைத்துவிட்டு, பேனாவை கையில் எடுத்தாள். அவள் ஒரு ambigram வரைந்துகொண்டிருந்தாள். Ambigram வார்த்தைகள் மிக சிறப்பானவை. நேராக வாசித்தாலும், தலை கீழாக திருப்பி வாசித்தாலும், அதே வார்த்தை தென்படும். பிரனிதா அதை தமிழில் செய்ய முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

[தொடரும்]

# மன்னரின் அங்கி!

அரண்மனைத் தையல்காரர் சிவஞானம் தன் இல்லத்தில் மகாராஜாவின் அங்கியைத் தைக்கப் பட்டுத் துணியை அளவெடுத்துக் கொண்டிருந்தார். அவசரத் தேவை என ஆள் வந்து சொன்னதால் இரவோடு இரவாக தைக்கத் தயார் செய்து கொண்டிருந்தார். அவர் மனைவி தைலம்மை ஊசிகளில் நூல் கோர்த்துக் கொண்டிருந்தாள்.

பெரிய அகல் விளக்குகளின் வெளிச்சத்தில் தையல் வேலையை ஆரம்பித்தார். நடு நிசி தாண்டியது. அங்கி தயாராகி விட்டது. ஜரிகை வேலைப்பாட்டைத் தொடங்கினார். நேர்த்தியாக அமைந்து விட்டது! மடித்து அழகாக ஒரு பெட்டியில் வைக்கப் போனபோது கை தவறி அகல் விளக்கு விழ அங்கி முழுவதும் எண்ணெய் தெறித்து விட்டது! அங்கங்கே புள்ளி புள்ளியாக அலங்கோலமாகிவிட்டது. திகைத்து நின்றார் தையற்காரர். அவர் மனைவி அவசர அவசரமாக சுண்ணாம்புப் பொடியைத் தடவி எண்ணெய்க் கறையை நீக்க முயற்சித்தாள். முடியவில்லை. அது மேலும் சட்டையை அசிங்கப்படுத்தியது.

''என்னங்க உட்பக்கம் தானே.. வெளியே தெரியாது ஒரு மெல்லிய துணியை அதே வண்ணத்தில் உட்பக்கமாகப் பொருத்தி மறைத்து விடலாம்.. தெரியாது'' என்றார் மனைவி.

''என்ன சொல்கிறாய் நீ! இது அரசரின் அங்கி. இதை அணிந்து கொண்டு அவர் பல தேச அரசர்கள், மந்திரிப் பிரதானிகளுடன் விருந்துக்குப் போக வேண்டும். நம் நாட்டின் பெருமைச் சின்னமல்லவா நம் அரசர். என் மனம் ஒப்பவில்லை. இப்போதே வேறு ஒரு அங்கியை தைத்து விடுகிறேன்'' என பதிலளித்தார் தையல்காரர்.

மிகவும் சிரமப்பட்டு இன்னொரு அங்கியை தயாரித்து அலங்கார வேலைகள் முடிந்த போது பொழுது விடிந்து விட்டது. வெளியே குதிரைச் சத்தம். காவலன் அங்கியை வைத்திருந்த பெட்டியை வாங்கிச் சென்றான்.

ஒரு வாரம் கழித்து தையற்காரர் சிவஞானத்தை சபைக்கு வரவழைத்தார் மன்னர். கை கட்டி வாய் பொத்தி நின்ற சிவஞானத்திடம் ''எண்ணெய்க் கறைபட்ட அங்கியை என்னப்பா செய்தாய்?'' என்று கேட்க, சிவஞானம் விக்கித்துப் போனார். ஏதாவது தண்டனை கிடைக்கப்போகிறதோ. இப்போது மன்னருக்கு என்ன கூறுவது. தடுமாறினார் தையல்காரர்.



''திகைக்காதே.. அன்று இரவு நகர சோதனைக்கு மாறு வேடத்தில் நான் வந்த போது ஊரே அடங்கி விட்ட வேளை உன் வீட்டில் மட்டும் வெளிச்சம் தெரிந்தது. அப்போது நீயும் உன் மனைவியும் பேசியதைக் கேட்டேன்... நடந்ததை அறிந்தேன்! கறை பட்ட அங்கிக்கு மாற்றாக சிரமத்துடன் மறுபடி தைத்த உன் விசுவாசம் என்னை வியப்பில் ஆழ்த்தியது!....''

என்று கூறிவிட்டு மகிழ்வுடன் தன் கழுத்தில் இருந்த பெரிய தங்க ஆபரணத்தை சிவஞானத்தின் கழுத்தில் அணிவித்தார். விஷயம் தெரிந்த அவையோர் கரகோஷித்து தமது மகிழ்வை வெளிப்படுத்தினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




## மழைக்குருவி

## (*House Swift*)

இலங்கையில் 'மழைக்குருவி' எனவும், தமிழ்நாட்டில் 'நாட்டு உழவாரன்' எனவும் இது அழைக்கப்படுகின்றது. இக்குருவிகள் கூட்டமாகவே பறக்கும். இவை தாழப்பறந்தால் மழைவரும் அறிகுறி எனும் ஐதீகம் உண்டு.



உடல் பெருமளவு கருமை கலந்த கபிலநிறமாகக் காணப்படும்.. பிட்டமும் தொண்டையும் வெண்மையாக இருக்கும். பழைய கட்டடங்கள், பாறை இடைவெளிகளில் கூடு கட்டும். உக்கிய தாவரப் பகுதிகளுடன் உமிழ்நீரைக் கலந்து பசையாக்கிக் கூடுகளைக் கட்டும். இவை இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய நாடுகளில் உள்ளன. சில பறவைகள் வலசையில் புலம்பெயர்ந்து செல்வதாகவும் சில நிரந்தரமாக இலங்கையில் வாழ்வதாகவும் அறியப்படுகின்றது.

அடுத்த வாரம்
ஆள்காட்டி

## ஒரு நாள் ஒரு சொல்

சுயேச்சை ✓
சுயேட்சை ✕

பலரும் சுயேட்சை வேட்பாளர் என்று எழுதுவதைப் பார்க்கிறோம். இது தவறாகும். சுய இச்சையுடன் அதாவது சொந்த விருப்பத்தில் என வரும். அந்தவகையில் சுயேச்சை என்பதே சரியானதாகும்.

- ஷாப்றி

## பவளத்தீவு

'பவளத்தீவு'கள் என்பது 'பவளப்பூச்சிகள்' என்னும் நுண் உயிர்களால் உருவான தீவுகளாகும். இந்த உயிரினங்கள் கூட்டம் கூட்டமாக வாழும். இவை இறந்ததும், இறந்த நுண் உயிரினங்களின் மீது ஏனைய கடல் உயிரினங்கள் புற்றுகள் பெருங் கொத்துக்களாகப் படரும். இதுவே பின்பு பவளத் தீவுகளாக மாறுகின்றன.



## அதிசயமான கடல் உயிரினம்

உலகில் பாம்புகளைவிட அதிக விஷம் கொண்ட பிராணியாகத் திகழ்வது 'போர்ச்சுகீஸ் மேன் ஒஃப் வார்' என்ற கடல்வாழ் மீன் இனமாகும். இது ஊதா நிற 'ஜெல்லி ஃபிஷ்' வகையைச் சேர்ந்தது. 12 அடி அகலமும் நீளமும் கொண்ட இந்த மீனில் ஒரு பகுதி ரிப்பன் ரிப்பன்களாகத் தொங்கிக்கொண்டிருக்கும். இது ஐந்து லட்சம் விஷச் செல்களாலானது. எனினும், இதன் தொப்பி போன்ற பகுதியில் விஷத் தன்மை கிடையாது. ஆனால், இந்த ரிப்பன் போன்ற பகுதியில் ஒன்றைத் தொட்டால்கூட மின்சாரம் தாக்கியது போன்ற உணர்வுடன் விஷம் உடலில் பாயும்.



## கேள்விக்கான பதிலும் பதிலிலிருந்து கேள்வியும்

**11. பொஸ்டன் தேநீர் விருந்து என்றால் என்ன?**

காலனித்துவ நாடுகளுக்கு தேயிலையை விநியோகிக்கும் அதிகாரத்தினை பிரித்தானிய கிழக்கு இந்திய கம்பனிக்கு வழங்கியதற்கு எதிராக 1773 ஆம் ஆண்டில் பொஸ்டன் துறைமுகத்தில் தரித்திருந்த தேயிலைப் பொதிகள் ஏற்றப்பட்ட கப்பலுக்கு எதிராக அமெரிக்க புரட்சியாளர்கள் தாக்குதலை நடத்தி தேயிலைப் பெட்டிகளைக் கடலுக்குள் மூழ்கடித்த நிகழ்வு.

**12. தேநீர் பானத்தினை உலகுக்கு அறிமுகம் செய்தவர்கள் யார்?**

சீனர்கள்

**13. சீனாவின் பண்டைய நாகரிகம் உருவான நதி எது?**

கொவாங்ஹோ நதிக்கரை

**14. கொவாங்ஹோ நதிக்கரை நீரின் சேற்றுக் கலவை காரணமாக, அது எவ்வாறு அழைக்கப்பட்டது?**

மஞ்சள் நதி

**15. 'மஞ்சள் நதி' எந்த இடத்தில் கடலில் சங்கமிக்கின்றது?**

பொஹாய் கடலில்

**16. பொஹாய் கடலுக்கு அருகாமையில் இருக்கும் 'வடக்கு-கிழக்கு' என்று பிரிந்துள்ள நாடுகள் எவை?**

கொரியா

**17. கொரியாவுக்கும், ஜப்பானுக்கும் அப்பால் அமைந்துள்ள கடல் எது?**

பசுபிக் சமுத்திரம்

**18. பசுபிக் சமுத்திரம் மற்றும் அத்திலாந்திக் சமுத்திரம் ஆகியவற்றை இணைத்து அமைக்கப்பட்ட கால்வாய் எது?**

பனாமா கால்வாய் ஏரி

**19. ஏன் பனாமா கால்வாய் நிர்மாணிக்கப்பட்டது?**

ஆபிரிக்காவின் கேப் முனையினூடாக மேற்கொள்ளப்பட்ட தொடர் கப்பல் போக்குவரத்து பயணங்களை தடுப்பதற்காகவும் கடற்பயணத் தூரத்தைக் குறைப்பதற்காகவும் இந்த கால்வாய் நிறுவப்பட்டது.

**20. ஆபிரிக்காவின் கேப் முனைக்கு மேலாக அத்திலாந்திக் சமுத்திரத்தில் அமைந்துள்ளதும் அதிகமான எரிமலைகளைக் கொண்டதுமான தீவு எது?**

ஐஸ்லாந்து

(மிகுதி அடுத்த வாரம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளின் சிறப்பான தேர்ச்சி மட்டத்தைப் பார்த்து, சிலவேளைகளில் பரிசாக கணினி ஒன்றைப் பரிசளித்திருக்கலாம். ஆனால், இணைய மற்றும் கணினி பாவனை தொடர்பில் மிகவும் அவதானமாக இருப்பது அவசியமாகும். அந்தவகையில், இணையத்தையும் கணினியையும் சரியான முறையில் கையாள்வது பற்றியே இக்கட்டுரை தெளிவுபடுத்துகின்றது.

# இணையத்



## உங்களுக்கு கணினி கிடைத்தது ஏன்?

உங்களின் கல்வி மட்டத்தை உயர்த்துவதற்கும் நவீன உலகில் கல்வியில் நிலவும் போட்டித் தன்மையைக் கருத்திற்கொண்டும் மிகத் திறமையான ஒருவராக உங்களை உருவாக்கும் படிக்கல்லாக கருதியே பெற்றோர்கள் உங்களுக்கு கணினியை வழங்கியுள்ளனர்.

இணையத்தள வசதிகள் இருந்தால் மேலதிக அறிவைத் தேடும் பொருட்டும், டைப்செய்வதற்கும், மென்பொருள் குறித்து அறிந்துகொள்ளவும், மொழி அறிவை விருத்தி செய்யவும் என பல விடயங்களை விருத்தி செய்யக் கணினி பயன்படுகின்றது. எனினும், சில பிள்ளைகள் தவறான கையாள்கையான கணினியில் விளையாட்டுகள் (கேம்ஸ்) மற்றும் பொருத்தமற்ற வலைத்தளங்கள், முகநூல் (Face book) போன்றவற்றால் பாரதூரமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.




noolaham.org | aavanaham.org

# கவனமாக கையாள்வோம்

## சரியான இணையப் பயன்பாடு

இணையத்தின் ஊடாக, முகநூல் மூலமோ இணையத்தளத்தின் மூலமாகவோ, அறிமுகம் இல்லாதவர்களுடன் தொடர்புகொள்வது பிள்ளைகளுக்கு பல பிரச்சினைகளை தோற்றுவித்துள்ளன. அதற்கு முக்கிய காரணம் பிள்ளைகளுக்கு சமூக அறிவு குறைவாக இருப்பதும் வரையறையற்ற விதத்தில் கணினியை கையாள்வதுமே ஆகும்.

## வலைத்தளங்களில் பெறப்பட்ட தகவல்களை உறுதிப்படுத்துக

ஏதாவதொரு வலைத்தளங்களின் மூலமாக பெறும் தகவல்கள் 100% சரியானவை என கூற முடியாது. அதனால், அதில் உள்ள தகவல்களை பெறும்போது உங்கள் பாடநூல்கள் மற்றும் கல்விசார் உசாத்துணை நூல்களில் உள்ள தகவல்களுடன் ஒப்பிட்டு அவை சரியான தகவலா? என உறுதிசெய்துகொள்ளுங்கள்.


அத்தோடு, ஆசிரியர்களின் உதவியோடு சரியான தகவல்களைக் கொண்ட வலைத்தளங்களை இனங்கண்டுகொள்ளுங்கள். இவ்விடயத்தில் பெற்றோர்களினதும் உங்கள் சகோதர, சகோதரிகளினதும் வழிக்காட்டல்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

## தெரியாதவர்களுடன் தொடர்பு கொள்ளாதீர்கள்

வலைத்தளங்களை பார்வையிடும்போது உங்களுக்கு அறிமுகம் இல்லாதவர்கள் நண்பர்களாக உங்களை நெருங்கலாம். அத்தகையோருடன் ஒருபோதும் தொடர்பு கொள்ளாதீர்கள். இது குறித்து பெற்றோர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும்.

சில பிள்ளைகள் உடுத்தும் உடைகள் குறித்தும் அணியும் ஆபரணங்கள் குறித்தும், வீட்டில் ஆட்கள் இல்லாத நேரங்கள் குறித்தும், உங்கள் விருப்பு வெறுப்புகள் குறித்தும் எதனையும் முன்பின் அறிமுகம் இல்லாத நபர்களிடம் கூறாதீர்கள். இதனால், உங்களுக்கு மாத்திரமல்ல வீட்டில் இருக்கும் அனைவருக்கும் ஆபத்துக்கள் ஏற்படலாம்.





## இணையத்தளத்தினால் ஏற்படும் பிரச்சினைகள்

இணையத்தளப் பாவனையின் காரணமாக, சில பிள்ளைகளுக்கு உடல், உள பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இணையத்தளத்தின் ஊடாக அறிமுகம் இல்லாதவர்கள் மூலம் ஏற்படும் நெருக்கடிகள், நிர்ப்பந்தங்கள், தீமைகள், புகைப்படங்களை மாற்றுதல் போன்ற பிரச்சினைகள் ஏற்பட்டால் அவற்றை முதலில் உங்கள் பெற்றோரிடம் கூறுங்கள்.

## பிரச்சினைகளை யாருக்கு தெரிவிக்க வேண்டும்

இணையத்தளம் மூலமாக உங்களுக்கு பிரச்சினைகள் தொல்லைகள் ஏதும் இருந்தால், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்கு 1929 அல்லது இலங்கை கணினி உடன் பதில் தொடர்பகத்திற்கு 011-2691692 ஆகிய தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளலாம். இலங்கை கணினி உடன் பதில் தொடர்பகமானது, தொழில்நுட்ப ரீதியில் உங்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியவர் குறித்த தகவல்களை பெற்று உங்களுக்கு தெரியப்படுத்தி அதன் பாரதூரத்தை சுட்டிக்காட்டும்.

பொலிஸ், சிறுவர் மற்றும் மகளிர் செயலகம் மற்றும் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை உரிய விசாரணைகளையும் சட்டரீதியான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

## வலைத்தளத்தின் தவறான பக்கம்

வலைத்தளத்தில் பிரவேசிக்கும்போது நீங்கள் வரையறையுடன் கூடிய ஓர் எல்லையை எடுத்துக்கொள்ளாவிட்டால் பாரதூரமான பிரச்சினைகள் ஏற்படலாம். நீங்கள் வலைத்தளங்களை பார்வையிடும் வேளையில் இடையிடையே பொருத்தமற்ற வலைத்தளங்கள் குறுக்கிடலாம். அவற்றைப் பார்வையிட வேண்டாம்.

## பொருத்தமான வலைத்தளங்களை தேர்வு செய்தல்

பெற்றோர்களால் பிள்ளைகளுக்கு கணினி ஒன்றை வழங்கும்போது இணையத்தளம் தொடர்பான தகவல் செயல்முறையில் 'கண்டெக்ட் வொல்டரின்' முறையைப் பயன்படுத்தச் செய்ய வேண்டும். இணையத்தள சேவையை வழங்கும் நிறுவனத்திற்கு இது குறித்து தெரியப்படுத்தினால் அவர்கள் பிள்ளைகளுக்கு பொருத்தமான சரியான இணையத்தளங்களை முன்கூட்டியே பெற்றுக்கொடுப்பர். இதனால், பிள்ளைகள் தேவையற்ற இணையத்தளங்களை தவிர்த்து பொருத்தமான இணையத்தளங்களை மட்டும் பார்வையிட முடியும்.




- இரஞ்சித் ஜெயகர்

noolaham.org | aavanaham.org






## கணிதம்


பெயர்: ............................................

பின்வரும் வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிந்து அதன்கீழ் கீறிடுக.

★ 01, 02, 03 ஆம் வினாக்களில் அடுத்து வர வேண்டிய சரியான விடை யாது?

01.


02.


03.


★ △ + △ = ○   □ + □ = △

04. இத்தரவின்படி, குறைந்த பெறுமதி உடைய உரு எது?

1. ○   2. □   3. △

05. மிகக் கூடிய பெறுமதி உடைய உரு யாது?

1. ○   2. □   3. △

06. 4213 ⟶ 3124 எனின்; 4735 ⟶ ........?
வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண் யாது?

1. 7354   2. 5374   3. 7355

07. ஒரு குவியலில் 15 தேங்காய்கள் இருந்தன. மற்றொரு குவியலில் அதைவிட இரண்டு மடங்கு தேங்காய்கள் இருந்தன எனின், இரு குவியல்களிலும் உள்ள தேங்காய்கள் எத்தனை?

1. 30   2. 40   3. 45

08.

| 3 3 | 4 4 | 5 5 |
|---|---|---|
| (9) | (16) | (-) |
| 27 | 48 | 75 |

1. 10   2. 25   3. 15

09. பேனை ஒன்றின் விலை ரூபா 30.00 ஆகும். அப்பணத் தொகைக்கு 6 பென்சில்களை வாங்கலாம் எனின், 14 பென்சில்களை வாங்கத் தேவையான பணம் எவ்வளவு?


1. ரூபா 70.00   2. ரூபா 60.00
3. ரூபா 75.00

10. வேலி ஒன்றின் இரு தூண்களுக்கிடையிலான தூரம் 3m ஆகும். அங்கு 15 தூண்கள் நடப்பட்டிருப்பின், வேலியின் மொத்த நீளம் யாது?


1. 42m   2. 45m   3. 40m

★ விடை தருக


11. 1kg வாழைப்பழத்தின் விலை ரூ. 125.00 எனின், 1kg 250g வாழைப்பழத்தின் விலை யாது? .............................

12.  அருகில் உள்ள செவ்வகத்திற்கு சமச்சீர் அச்சுக்களை வரைந்து காட்டுக.

13. 5m 75cm ஐ சென்ரிமீற்றரில் தருக. ...............................

14. 

A யிலிருந்து B,C யினூடாக D யின் தூரம் யாது? .......................

15. 

1. இவ்வுருவின் பரப்பளவு யாது?
..........................
2. இவ்வுருவின் சுற்றளவு யாது?
..........................

(விடைகள் அடுத்த இதழில் வெளிவரும்)

## தமிழ்

(பெப்ரவரி 07 ஆம் திகதி பிரசுரமான வினாக்களுக்கான விடைகள்)

01) 1. இலங்கை   2. மழைவளம், மண்வளம்
3. இந்தியா   4. இந்து சமுத்திரம்
5. 1. ஆறு   2. அழகு   3. மலை
4. நாடு   5. சமுத்திரம்
6. 1. அயல்   2. நாடு
7. 1. வளம்+உள்ளது   2. தாய்+நாடு
8. 1. அயல்நாடுகள்   2. எங்கள்   3. இவையே

02) 1. மாணவன் பாடசாலையை நோக்கி நடந்தான்.
2. சிறுவன் தந்தையைக் கண்டவுடன் அழுதான்.

03) 1. சிலர் தாம் செய்ததை சரி என்று வாதிடுவர்
2. துன்பம் நேர்ந்தவருக்கே தொடர்ந்து துன்பம் வரும்
3. அடிக்கடி சென்றால் வெறுப்பேற்படும்


04) 1. உதவி செய்தல்   2. ஏமாற்றுதல்/பொய் பேசுதல்
3. தந்திரமாகப் பேசுதல்

05) 1. பணிப்பாளர்   2. அன்பு   3. மலை

06) 1. தம்பி   2. மேடு   3. ஆனந்தம்
4. சிறுவர்   5. ஆமை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கெப்லர் கண்டுபிடித்த 'இருண்ட குள்ளன்' என்ற கிரக அந்தஸ்தற்ற கிரகம்



எமது சூரியத்தொகுதிக்கு அப்பால் பூமியைப் போன்ற கிரகங்கள் ஏதேனும் உள்ளனவா? என்று ஆராய்ந்து அறிந்து கொள்வதற்காக 'நாஸா' நிறுவனம் 'கெப்லர்' என்ற தொலைக்காட்டியினை விண் பரப்பில் நிறுவியுள்ளது. இதனால் பிரபஞ்சத்தின் மர்மங்களை விஞ்ஞானி களினால் துலக்க முடிந்துள்ளது. இந்த வகையில் குறிப் பிட்ட இந்த கெப்லர் தொலைக்காட்டி இருண்ட குள்ளக் கிரகங்களைக் கண்டுபிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஓஆர் 10


2007 ஆம் ஆண்டில் கெப்லர் தொலைக்காட்டி கண்டுபிடித்த '2007 ஓர்ஆர் 10' என்ற கிரக அந்தஸ்தற்ற கிரகத்தினையே 'இருண்ட குள்ளன்' என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர். எமது சூரியத் தொகுதியில் உள்ள கிரகஅந்தஸ்தற்ற கிரகங்களில் இந்த கிரகமே மிகவும் பெரியது என்று கருதப்படுகின்றது.

குள்ளக் கிரகம் தொடர்பாக, அண்மையில் அறியக் கிடைத்த தகவல்களின்படி இந்த கிரகம் மிகவும் பெரியது என்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த கிரகத்தினை 'மெக் ஸ்வப்' மற்றும் 'மைக்கல் பிரவுன்' என்ற பட்டதாரிகள் இருவரே கண்டுபிடித்திருந்தனர்.

இந்த கிரகம் இருள டைந்து காணப்படுகின்றது. மற்றைய கிரக அந்தஸ்தற்ற கிரகங்களைப் போலல்லாது இது மிகவும் மெதுவாகவே, சூரியனை சுற்றி சுழல்கின்றது. இதன் சுற்றளவு 1,535 கிலோமீற்றர். இந்த இருண்ட குள்ளக் கிரகம் 'மேக் மேக்' என்ற இருண்ட குள்ளக் கிரகத்திற்கு அடுத்தபடியாக பெரிதாக உள்ளது. 2017 ஓஆர் 20 (இருண்ட குள்ளன்) உட்பட ஏர்ஸ், புளுட்டோ என்பனவும் எமது சூரியத் தொகுதியில் உள்ள கிரக அந்தஸ்தற்ற கிரகங்களாகும்.

## கிரகங்களுக்கான தகைமைகள்

சர்வதேச வானியல் விஞ்ஞான சங்கத்தின் கருத்தின்படி, கிரகம் என்ற அந்தஸ்தினைப் பெறுவதற்கு மூன்று தகை மைகள் இருக்க வேண்டும். இதில் முதலாவது - சூரியனை சுற்றிச் சுழல வேண்டும். இரண்டாவது - ஒரு கிரகத்தின் சந்திரனாக அதாவது, உப கோளாக



© Konkoly Observatory/Andras Pal, Hungarian Astronomical Association/Ivan Eder, NASA/JHUAPL/SwRI

இருக்கக் கூடாது. மேலும், தனக்கான ஈர்ப்புச் சக்தி அதற்கு இருக்க வேண்டும் என்பதுடன் உருளை வடிவத்தினைக் கொண்டிருப்பது அவசியம். மூன்றாவது - சூரியத்தொகுதியில் உள்ள இதர கிரகங்கள் சூரியனை சுற்றி சுழல்வதனைப் போன்று சுழல வேண்டும். குள்ளக் கிரகங்களுக்கு இந்த தகைமைகள் எதுவுமே கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது.

விஜய் + தூவானம் இணைந்து வழங்கும் பரிசுப் போட்டி

பிரதி புதன்தோறும் Thoovaanam SMS ஊடாக கேட்கப்படும் பொது அறிவுக் கேள்விக்கான சரியான விடையினை 'விஜய்' கூப்பனில் நிரப்பி தபாலிட்டு ரூபா. 8,000 பெறுமதியான 3 பரிசில்களையும் பெற்றிடுங்கள்.

வாராந்தம் இவ் 3 பரிசில்களையும் வெல்வதற்கான கேள்வியினை அறிந்து கொள்ள → அருகில் காட்டப்பட்டவாறு உங்கள் கையடக்க தொலைபேசியில் Thoovaanam SMS இனை செயற்படுத்திக்கொள்ளுங்கள்

Thoovaanam SMS செயற்படுத்தும் முறை

F Thoovaanam

என Type செய்து 40404 எனும் இலக்கத்திற்கு SMS செய்யவும்

(இச்சேவை முற்றிலும் இலவசம்)

அனுப்ப வேண்டிய முகவரி :

3 பரிசில்கள்
14.02.2018
விஜய்
த.பெ.இல: 2037
கொழும்பு

இவ்வார கூப்பன் - 14.02.2018
விடை : ..............................
பெயர் : ..............................
முகவரி : ......................
தொ.பே.இல: ..............................
பாடசாலை : ..............................
..............................
கையொப்பம்

3 பரிசில்கள் போட்டி - 31.01.2018
விடை: 1985
வெற்றியாளர்:
ப.மெரியா,
29, 14 ஆம் கட்டை,
சின்னசாளம்பன், ஒட்டுசுட்டான்.

Gift sponsored by: www.srijob.com







noolaham.org | aavanaham.org



# மாணவர் ஆக்கங்கள்

## வெற்றியின் இரகசியங்கள்



☞ தோல்வி உன்னைத் துரத்துகின்றது என்றால் நீ வெற்றியை நெருங்குகின்றாய் என்று அர்த்தம்....!

☞ காயம் இல்லாமல் கனவுகள் காணலாம் ஆனால், வலிகள் இல்லாமல் வெற்றி காண முடியாது.

☞ வெற்றி வரும்வரை குதிரை வேகத்தில் ஓடு. வெற்றி வந்ததும் அதனைவிட வேகத்தில் ஓடு. அப்போதுதான் உன் வெற்றி நிலைக்கும்.

என்.எம்.நிஸாத்,
தரம்-13A,
தி/கிண்ணியா அல்-அக்ஸா கல்லூரி,
கிண்ணியா.

## காடை



காடை என்பது ஒரு பறவை இனமாகும். இவை புதர் காடுகளிலும் புல்வெளிகளிலும் வாழும் சிறிய பறவை இனமாகும். இவை செம்பழுப்பு நிறத்தில், வெள்ளைப் புள்ளிகளும் கரும் புள்ளிகளும் கலந்திருக்கும் வர்ணத்தையும் சிறிய வாலையும் கொண்ட பறவையாகும். மண்ணில் குழி தோண்டிப் புல், வைக்கோல் ஆகியவற்றின்மூலம் சிறிய கூடு அமைத்து வாழும். கோடை காலத்திலேயே முட்டை இட்டு குஞ்சு பொரிக்கின்றன. இவை பல ஒன்று சேர்ந்து கூட்டமாகவே வாழ்கின்றன. பெரும்பாலும் தானியங்களையும் பயிர்களுக்கு தீங்கு விளைவிக்கும் பூச்சிகளையுமே உண்கின்றன. விவசாயிகளின் இன்னொரு நண்பன் காடை ஆகும். இந்த காடை பறவை உலகெங்கும் காணப்படுகின்றன.

எஸ்.கிஷானி கௌசிகா,
தரம்-7,
இ/ஸ்ரீ கிருஷ்ணா மகா வித்தியாலயம்,
கஹாவத்தை.

நீங்களும் ஆக்கங்களை அனுப்பலாம்
முகவரி
மாணவர் ஆக்கங்கள்,
'விஜய்'
த.பெ.இல 2037,
கொழும்பு

## செயற்படுத்து



நட- அதிர்வின்றி
பேசு - பணிவாக
உண் - அளவாக
சுவாசி - ஆழமாக
தூங்கு - அமைதியாக
உழை - உண்மையாக
நம்பு - சரியாக
திட்டமிடு - முன்னதாக
சிந்தி - சுயமாக
படி- முடிவின்றி
மரணி - பயமின்றி

எம்.எஸ்.ஹாஜரா,
தரம்-10,
அல்-பலாஹ் ம.வித்

## பழமொழிகள்

★ ஆழம் அறியாமல் காலை விடாதே.
ஒன்றைப்பற்றி நன்கு அறியாமல் அந்த விடயத்தில் ஈடுபடக்கூடாது.

★ உப்பிட்டவரை உள்ளளவும் நினை.
உதவி செய்தவரை உயிருள்ளவரை மறக்கக் கூடாது.

★ ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?
எதையும் இளமையில் செய்ய வேண்டும்.

★ காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்.
சந்தர்ப்பத்தை தவறவிடக்கூடாது.

★ தொட்டில் பழக்கம் சுடுகாடு வரை.
சிறு வயதுப் பழக்க வழக்கங்கள் முதுமையானாலும் இறுதிவரை நிலைத்து நிற்கும்.

எஃப்.நாஸ்னீன்,
தரம்- 5,
கமு/அக் ஒலுவில் தெற்கு பாத்திமா வித்தியாலயம்.

## விருதுகள் பற்றிய பதிவுகள்

★ நெல்சன் மண்டேலா பெற்ற விருதுகள்
அமைதிக்கான நோபல் பரிசு *(1993)*
மனச்சாட்சியின் தூதுவர் விருது *(2006)*
இப்படி 250 விருதுகளை அவர் பெற்றுள்ளார்



★ 2014 உலகக் கிண்ண கால்பந்தாட்டப் போட்டியில் 'தங்கக் காலணி' விருது பெற்றவர்
ஜேம்ஸ் ரொட்ரிகஸ் (கொலம்பியா)

★ 'தங்க கையுறை' விருது பெற்றவர்;
மெனுவல் நியர் (ஜேர்மனி)

★ 'தங்கப் பந்து' விருது பெற்றவர்;
லயனல் மெஸ்ஸி
(ஆர்ஜென்டீனா)

மு.ச.பா.நுஸ்கா,
தரம்-12,
கமு/மஹ்மூத் மகளிர் கல்லூரி,
கல்முனை.

## உயிர் நண்பி..!



உடன் பிறவாத
சகோதரி நீ...!
என் வாழ்வில்
ஏணி நீ...!
என் சாதனைகளின்
துணையும் நீ...!
துன்பத்தில் இன்பம் நீ...!
தோல்வியில் மகிழ்ச்சி நீ...!
நீயும் இறைவனிடம்
வேண்டிக் கொள்
அடுத்த ஜென்மமும் நீ என்
உயிர் நண்பியாக
இருக்க வேண்டு என்று...!

ஜி.நயோமி,
தரம்-08,
க/கதிரேசன் மத்திய கல்லூரி,
நாவலப்பிட்டி

## விஞ்ஞானியாகிய முட்டாள்



அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இடம்பெற்ற ஓர் உண்மைச் சம்பவம். நியூயோர்க் நகரின் பிரபல பாடசாலை ஒன்றில் ஒரு மாணவன் படித்துக்கொண்டிருந்தான். மற்றைய மாணவர்கள் மத்தியில் படிப்பில் காணப்பட்ட கவனமும் அக்கறையும் இவனிடம் இருக்கவில்லை. அவன் பரீட்சைகளிலும் மிகவும் குறைவான மதிப்பெண்களையே பெற்றான். இதனால், பாடசாலை அதிபர் அவனை பாடசாலையில் இருந்து விலக்கிவிடத் தீர்மானித்தார். ஒருநாள் அந்தச் சிறுவனை அழைத்து அவனின் கையில் ஒரு கடிதத்தைக் கொடுத்து அதை அவனது தாயிடம் சேர்ப்பிக்குமாறு கூறினார். அவனும் தாயிடம் கொடுக்கவே அவர் அதை பிரித்துப் படித்துவிட்டு கண்ணீர் விட்டு அழுதார். அப்போது சிறுவன் தாயிடம் "ஏன் அம்மா அழுகிறீர்கள்?" எனக் கேட்டபோது தாய் "அ... அது ஒன்றுமில்லை" எனக் கூறி சமாளித்துவிட்டார். சிறுவன் மிகவும் ஆழமாக சிந்தித்தான். அவனின் மனதில் "எனது படிப்புப் பற்றித்தான் அம்மா கவலைப்படுகிறார்' என்ற எண்ணம் உண்டாகியது. காலங்கள் சென்றன.

அச்சிறுவன் வளர்ந்து விஞ்ஞானியாகிவிட்டான்.

அவனுடைய தாயே, அவனை வீட்டில் வைத்து படிப்பித்திருந்தார். காலப்போக்கில் தாய் முதுமையடைந்து இறந்துவிட்டாள். அவனது தாய் வசித்த அறையை துப்பரவு செய்தபோது ஒரு கடிதத்தை அவன் கண்டெடுத்தான். தாயிடம் சேர்ப்பிக்குமாறு அதிபர் தனக்குத் தந்த கடிதம் இதுதான் என அவன் ஊகித்துக்கொண்டான். அதை விரித்துப் படித்தபோது....

"மூளை வளர்ச்சி குன்றிய உங்களின் முட்டாள் மகனைப் படிப்பிப்பதற்கு பொருத்தமான ஆசிரியர்கள் எனது பாடசாலையில் இல்லை"

இப்படிக்கு அதிபர்

என எழுதப்பட்டிருந்தது. அவன் கண்ணீர் சிந்தி அழுதான். ஏனெனில், தன்னை முட்டாளாகப் பார்த்த சமூகம் மத்தியில் தனது தாய் தன்னை விஞ்ஞானியாகப் பார்த்துள்ளாள்! என்று அவன் அழுதான். அது யார் தெரியுமா? மின்குமிழைக் கண்டுபிடித்த தோமஸ் அல்வா எடிசனே அவராவார்.

ய.அனோஜியஸ்,
தரம்-12.
யா/இந்துக் கல்லூரி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் PLUS +

# வடிவங்களால் உருவங்கள்

வீடு, மரங்கள்




ட்ரக்






பூனை



வண்ணத்துப்பூச்சி



ஒட்டகச்சிவிங்கி




பூச்சாடி



ரயில்


## அழகாக நிறந்தீட்டுவோம்




## வழங்கப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப

# கோழிக்குஞ்சுகளை நிறந்தீட்டுக

①- மஞ்சள், ②- இளஞ்சிவப்பு, ③- இளநீலம், ④- பழுப்பு, ⑤- சாம்பல்




## பொருத்தமான பாகத்துடன் இணையுங்கள்



– நுஸ்ஜீ

noolaham.org | aavanaham.org



சிவப்பு, நீலம், மஞ்சள் ஆகிய நிறங்களை ஒன்றுடனொன்று கலந்தால் பெறப்படும் நிறங்களையே பெரிய வாளிகளில் உள்ள நிறங்கள் குறிக்கின்றன.

01. மஞ்சளுடன் நீலத்தைக் கலந்தால் பெறப்படும் நிறம் யாது?

..........................................................................

02. செம்மஞ்சள் நிறத்தைப் பெறுவதற்கு என்னென்ன நிறங்களைக் கலக்க வேண்டும்?

..........................................................................

03. நீலத்துடன் சிவப்பைக் கலந்தால் பெறப்படும் நிறம் யாது?

....................................................

04. உங்கள் சூழலில் பச்சை நிறத்தில் காணக்கூடிய சிலவற்றைக் குறிப்பிடுக.

..........................................................................






மாமரத்தில் இருந்த .......................... (நாய்க்கூண்டில்/ குருவிக்கூட்டில்) தந்தைக்குருவியும் தாய்க்குருவியும் மூன்று .......................... (குட்டிகளும்/ குஞ்சுகளும்) மகிழ்ச்சியாக வாழ்கின்றன. தந்தைக்குருவி .......................... (அதிகாலையிலேயே/ மாலையிலேயே) உணவு தேடிச் சென்று மாலையில்தான் கூடு திரும்பும். அதுவரை .......................... (குருவி/ தாய்க்குருவி) குஞ்சுகளைப் பராமரிக்கும். அத்துடன், குஞ்சுகளுக்கு .......................... (ஓடவும்/ பறக்கவும்) கற்றுக்கொடுக்கும். தாய்க்குருவியின் சொல் கேட்டு நடக்கும் குஞ்சுகள், தந்தைக்குருவி வரும் வரை .......................... (ஆவலோடு/ பயத்தோடு) காத்திருக்கும்.

## தரவுகளுக்குப் பொருத்தமான படப் பெயரை எழுதுக


காடு


ஏரி


பூக்கள்


குரங்கு


சந்தை


புற்கள்


ஒட்டகச்சிவிங்கி


பாடசாலை

01. மரத்திற்கு மரம் தாவிச் செல்லும் பிராணி: ..........................................
02. நாம் கல்வி கற்கச் செல்லும் இடம்: ..........................................
03. மரங்கள், செடி-கொடிகள் நிறைந்துள்ள இடம்: ..........................
04. புல்வெளியில் வளர்ந்திருக்கும்: ..........................................
05. நீண்ட கழுத்தைக் கொண்ட பிராணி: ..........................................
06. தேவையான பொருட்களை இங்கே வாங்கலாம்: ..........................
07. நீர் நிறைந்து காணப்படும்: ..........................................
08. அழகாகவும் பல நிறங்களிலும் காணப்படும்: ..........................

01. சிறுவர்கள் பறக்கவிட்டிருப்பது என்ன?
1. விமானம் 2. பட்டம்
3. கொடி

02. ராணி பிடித்திருக்கும் பட்டம் எந்த வடிவத்திலானது?
1. ரொக்கெட்
2. பாம்பு
3. வண்ணத்துப்பூச்சி




03. பட்டங்கள் மேலே பறக்க உதவுவது;
1. மழை 2. காற்று 3. வெயில்

04. பட்டம் தயாரிக்கத் தேவையான பொருட்கள் யாவை?

..........................................................................

-ஜீநு

noolaham.org | aavanaham.org

## கீழுள்ள சொற்களை எழுத்துக் கூட்டத்திற்குள் இனங்கண்டு நிறந்தீட்டுக


| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| H | E | A | D | P | H | O | N | E | S |
| N | H | B | O | M | H | S | L | S | P |
| E | A | O | H | W | I | N | D | O | W |
| C | C | H | U | A | W | O | B | L | M |
| K | N | C | M | S | H | B | R | Z | S |
| L | R | H | L | K | E | H | O | H | H |
| A | H | A | M | M | E | R | H | W | Z |
| C | Z | I | H | T | A | B | L | E | L |
| E | F | R | P | E | N | C | I | L | S |
| T | W | H | C | A | R | P | E | T | H |




உதாரணம்:

- HAMMER
- WINDOW
- BOWL
- CHAIR
- NECKLACE
- CARPET
- HEADPHONES
- TABLE
- PENCILS


## நிழற்றப்பட்டுள்ள பகுதியை பின்னத்தில் தருக



## பொருத்தமற்றதில் வட்டமிடுக




## குறுக்கெழுத்துப் போட்டி: 279



### மேலிருந்து கீழ்

1. ஒரே பிரசவத்தில் பிறப்பவர்கள்.
2. பிரதிவாதம். (குழம்பியுள்ளது)
6. பாசம். (குழம்பியுள்ளது)
8. மான் இனங்களில் ஒன்று. (குழம்பியுள்ளது)

### இடமிருந்து வலம்


1. 2, 4, 6... போன்ற எண்கள் இந்த வகைக்குரியவை.
3. ஒரே விதம். (மாறியுள்ளது)
4. ஆடை வகையொன்று. (குழம்பியுள்ளது)
5. ஆகாயம்.
7. சிரசு.
8. கவி பாடுவதில் வல்லவன். (மாறியுள்ளது)





## சரியான நிழற்படத்துடன் இணையுங்கள்



## அறிவுக்கு விருந்து (31.01.2018) விடைகள்





### குறுக்கெழுத்துப் போட்டி: 278

| | | | | | |
|---|---|---|---|---|---|
| வ 1 | ன | வி 2 | ல | ங் | கு 3 |
| ளை | | ல் | | | 5 ற |
| யா | ச 4 | வி 5 | தி 6 | ம் | த் |
| ப 7 | தி | த் | ரு | | தி |
| தி | | தை | வி | க 8 | |
| | | | ழா | | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வத்தளையைச் சேர்ந்த சுரேந்திரன்-சுகந்தி தம்பதியரின் செல்வப் புதல்வன் திலோஷன்,



தனது ஒன்பதாவது பிறந்ததினத்தை 16.02.2018 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள்பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: சுரேந்திரன்)

விஜய் விழா உலா
த.பெ.எண் 2037
கொழும்பு

மாத்தளையைச் சேர்ந்த ஜீவா-கவிதா தம்பதியரின் செல்வப் புதல்வன் சவிந்தன், தனது எட்டாவது பிறந்தநாளை 06.02.2018 அன்று கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உற்றார் உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர்.

(தகவல்: ஜீவா)




# டொல்ஃபின்கள்

கடலில் வாழும் பாலூட்டிகளில் டொல்ஃபின் மீனும் ஒன்று. குளிர்ச்சியான கடல் நீரோட்டப் பகுதிகளிலேயே இவை அதிகம் காணப்படுகின்றன. இவை சிறு சிறு மீன்களை வேட்டையாடி உண்ணும். இறால் மீன் இவற்றுக்கு பிடித்தமான உணவு. பொதுவாக கடல்வாழ் உயிரினங்கள் ஓய்வெடுக்கும் நேரம் தவிர, மற்றைய நேரங்களில் வேட்டையாடுவதிலேயே குறியாக இருக்கும். இதற்கு விதிவிலக்கு இந்த டொல்ஃபின் மீன்கள். அந்தவகையில் இரை தேடும் நேரங்களில்கூட இவை சந்தோஷமாக ஒன்றோடு ஒன்று ஓடிப்பிடித்து விளையாடும்.


கடலுக்குள்ளிருந்து வேகமாக உந்தி எழுந்து துள்ளிக் குதிக்கும். இவை கடல் மட்டத்திற்கு மேலாக 20,30 அடி உயரம்வரை கூட துள்ளிக் குதித்து சாகசங்கள் செய்யும். இவை மிகவும் புத்திசாலித்தனமான விலங்கும்கூட. இதனால்தான் இதை சாகச விளையாட்டுக்குப் பயன்படுத்துகிறார்கள்.






எ.ப்ரவ்ஸா, சாஹிரா தேசிய கல்லூரி, அநுராதபுரம்.







ஜெ.திவேக்ஷா, ஹாலி-எல தமிழ் மகா வித்தியாலயம், ஹாலி-எல.




ரி.நஷாத், பாத்திமா பாலிகா மகா வித்தியாலயம், ஓட்டமாவடி.

த.பவித்திரன், புதுக்குடியிருப்பு றோ.க. வித்தியாலயம், முல்லைத்தீவு.



எஸ்.ஹனுஷன், ஹய்பொரஸ்ட் இல-03 தமிழ் வித்தியாலயம், கந்தப்பளை.





எஸ்.சவின்லூசன், புனித ஜோக்கிம் தமிழ் மகா வித்தியாலயம், இரத்தினபுரி.

# பறவைகளின் கோஷ்டி கானம்



அதிகாலை நேரங்களில் பறவைகள் கோஷ்டியாக கானம் இசைக்கின்றன. ஏன் இவ்வாறு கோஷ்டி கானம் இசைக்கின்றன என்பது தெரியுமா? தாம் இருக்கும் இடம் தங்களுக்கு உரிய இடம். அதனால் தங்கள் இனத்தைச் சேர்ந்த வேறு பறவைகள் எதுவும் இங்கே வரக்கூடாது என்பதற்காகத்தான் அவ்வாறு கோஷ்டி கானம் இசைக்கின்றன.




கே.கிருஷாந்தினி, சென் மேரிஸ் மகா வித்தியாலயம், பொகவந்தலாவை.



பி.விஸ்வா, இ/எம்பி/மாதம்பை இல-02 தமிழ் வித்தியாலயம், இறக்குவானை.



எஃப்.ஷராஃபா, அல்-அமான் முஸ்லிம் மகா வித்தியாலயம், கல்லொழுவ.

noolaham.org | aavanaham.org



# தாம் வாழும் சூழலுக்கேற்ப மாறுவேடமிடும் 'ஒக்டொபஸ்கள்'

எலும்புகளே இல்லாத உடலமைப்பு; மூன்று இதயங்கள்; நீல நிறக் குருதி; ஆறு கைகள்- இரண்டு கால்கள்; இப்படி பல்வேறு சிறப்புகளைக் கொண்ட கடல்வாழ் உயிரினம்தான் 'ஒக்டொபஸ்' ஆகும். இது தவிர, தாம் வாழும் சூழலுக்கேற்ப தமது தோலின் நிறத்தை மாற்றி, அந்த சூழலில் காணப்படும் கற்கள், மணல் அல்லது தாவரத்தின் பாகம் போன்றே மாறுவேடமிடக்கூடிய ஆற்றல்கொண்ட கடல்வாழ் உயிரினம் என்ற சிறப்பும் இதற்கு உண்டு.

உலகில் சுமார் 300 இற்கும் மேற்பட்ட ஒக்டொபஸ் இனங்கள் வாழ்ந்து வருகின்றன. 20 அடி நீளமும் 200 கிலோகிராம் நிறையும் கொண்ட ராட்சத பசுபிக் ஒக்டொபஸ்களும் ஆழ்கடலில் வாழ்கின்றன. அதே ஆழ்கடலில்தான், மிகச் சிறிய உடலமைப்பைக் கொண்ட ஒக்டொபஸ் இனங்களும் வாழ்ந்து வருகின்றன. ஒக்டொபஸ்கள் 3 அல்லது 4 வருடங்கள் என்ற மிகக் குறுகிய ஆயுட்காலத்தைக் கொண்டவையாகும்.



## எட்டுக் கால்கள் உள்ளனவா?

ஒக்டொபஸ்ஸிற்கு எட்டுக் கால்கள் உள்ளன என்று முன்னர் கூறப்பட்டாலும், அந்த எட்டும் கால்கள் அல்ல என்றும், அவற்றுக்கு இருப்பதோ ஆறு கைகளும் இரண்டு கால்களுமே என்றும் ஆய்வாளர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர். அத்துடன், அவற்றின் கைகள் மற்றும் கால்களில் சிறிய வட்ட வடிவ உறிஞ்சிகள் (suckers) காணப்படுகின்றன. இவற்றின் நுனிகளில் அழுத்தத்தை உணரக்கூடிய உணர் நரம்புகளும் இருக்கின்றன. ரசாயனங்களை இனங்காணுவதன்மூலம் சுவையை உணரும் நாவாகவும் இந்த சிறிய பாகங்கள் தொழிற்படுகின்றன.

-ஜெ.விபாகர்



க/மீரா மத்திய கல்லூரி மாணவனான எம்.முஜாஹித், 2017 தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 160 புள்ளிகளைப் பெற்று சித்தியடைந்துள்ளார்.


உங்கள் அபிமான

தமிழ்Mirror

திங்கள் முதல் வெள்ளிவரை

தினசரி தேசிய பத்திரிகையாக

வெளிவருகிறது

விலை Rs.10/=

wijeyanewspapers
helping shape opinions

the SUNDAY TIMES

விஜய்

DailyMirror

தமிழ்Mirror
www.tamilmirror.lk

விஜய நியூஸ் பேப்பர்ஸின் மற்றுமொரு தமிழ் வெளியீடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ආයුබෝවන්
ஆயுபோவன்
வணக்கம்

இன்றைய பாடத்தில் அம்மாவுக்கும் மகளுக்கும் இடையிலான உரையாடலைப் பார்ப்போம்.

දුව: අම්මේ! අද අපට රචනාවක් ලියාගෙන එන්න කිව්වා.
அம்மே! அத அபட்ட ரச்சனாவக் லியாகென என்ன கிவ்வா.
மகள்: **அம்மா! இன்று எங்களுக்கு கட்டுரையொன்று எழுதிக் கொண்டு வரச் சொன்னார்கள்.**

අම්මා: මොකක් ගැනද දුව?
மொகக் கெனத துவ?
அம்மா: **எதைப் பற்றி மகள்?**

දුව: තෛපොංගල් උත්සවය ගැන.
தைபொங்கல் உத்சவய கென.
மகள்: **தைப்பொங்கல் பெருநாள் பற்றி.**

අම්මා: තෛපොංගල් ගැන දුව දන්නේ නැද්ද?
தைபொங்கல் கென துவ தன்னே நெத்த?
அம்மா: **தைப்பொங்கல் பற்றி மகளுக்குத் தெரியாதா?**

දුව: ටිකක් දන්නවා... අම්මත් කියල දෙන්නකෝ.
டிக்கக் தன்னவா... அம்மத் கியல தென்னகோ.
மகள்: **கொஞ்சம் தெரியும்... அம்மாவும் சொல்லித் தாருங்களேன்.**

අම්මා: තෛපොංගල් උත්සවය පැවැත්වෙන්නේ කවදාද?
தைபொங்கல் உத்சவய பெவெத்வென்னே கவதாத?
அம்மா: **தைப்பொங்கல் பெருநாள் எப்போது நடைபெறுகிறது?**

දුව: ජනවාරි මාසයේ දහහතර වෙනිදා.
ஜனவாரி மாசயே தஹஹத்தர வெனிதா.
மகள்: **தை மாதம் பதின்நான்காம் திகதி.**

අම්මා: ඒක කාගේ උත්සවයක්ද?
ஏக்க காகே உத்சவயக்த?
அம்மா: **அது யாருடைய பெருநாள்?**

දුව: හින්දු භක්තිකයන්ගේ.
ஹிந்து பக்திகயன்கே.
மகள்: **இந்து பக்தர்களுடையது.**

අම්මා: එයාලා ඒක පවත්වන්නේ ඇයි?
எயாலா ஏக்க பவத்வன்னே எய்?
அம்மா: **அவர்கள் அதை ஏன் அனுஷ்டிக்கிறார்கள்?**

දුව: ඒක නම් දන්නේ නැහැ අම්මේ.
ஏக்க நம் தன்னே நெஹெ அம்மே.
மகள்: **அதென்றால் தெரியாது அம்மா.**

අම්මා: ගොවිතැනට උදවු කරන ඉර දෙවියන්ට ස්තුති කරන්න.
கொவிதெனட்ட உதவு கரன இர தெவியன்ட்ட ஸ்தூதி கரன்ன.
அம்மா: **விவசாயத்திற்கு உதவி செய்கின்ற சூரியனுக்கு நன்றி செலுத்துவதற்காக.**

: දැන් ඔය ටික ගළපලා රචනාව ලියන්න.
தென் ஒய டிக்க களபலா ரச்சனாவ லியன்ன.
: **இப்போது இவற்றை எல்லாம் சேர்த்து கட்டுரையை எழுதுங்கள்.**

**பயிற்சி**

**இடைவெளிகளை நிரப்புக.**

1. .................... උත්සවය.
2. ඒක කාගේ ....................ද?
3. ඉර දෙවියන්ට .................... කරන්න.




**Did எனும் துணை வினைச்சொல் (Auxiliary Verb) உதவிபுரியும் வினைச்சொல்லாக (Helping Verb) வாக்கியங்களில் கையாளப்படும் முறை**

★ **Did** எனும் துணை வினைச்சொல்லை, உதவிபுரியும் வினைச்சொல் என்ற ரீதியில் கையாண்டு, இறந்தகால தனி வாக்கியங்களில் காணப்படுகின்ற 'உடன்பாடு' நிலை வாக்கியங்களை, 'வினா' நிலை வாக்கியங்களாக மாற்றியமைத்தல்.

★ **தகுந்த உதாரணங்களை இங்கே அவதானிப்போம்.**

அ) You came to my house yesterday.
நீ நேற்று எனது வீட்டுக்கு வந்தாய்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative Sentence)

★ **மேற்காணும் 'உடன்பாடு' நிலையில் உள்ள வாக்கியத்தை 'வினா' நிலை வாக்கியமாகப் பின்வருமாறு மாற்றியமைக்கலாம்.**

ஆ) Did you come to my house yesterday?
நீ நேற்று எனது வீட்டுக்கு வந்தாயா?
(வினா வாக்கியம் - Interrogative Sentence)

★ You came. (Affirmative)
நீ வந்தாய். (உடன்பாடு நிலை)

★ Did you come? (Interrogative)
நீ வந்தாயா? (வினா நிலை)

**குறிப்பு:** came - **இறந்தகால வினைச்சொல்** (Past tense verb)
come - **நிகழ்கால வினைச்சொல்** (Present tense verb)

★ ★ ★ ★

இ) You took my pen.
நீ எனது பேனாவை எடுத்தாய்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative Sentence)

ஈ) Did you take my pen?
நீ எனது பேனாவை எடுத்தாயா?
(வினா வாக்கியம் - Interrogative Sentence)

★ You took. (Affirmative)
நீ எடுத்தாய். (உடன்பாடு நிலை)

★ Did you take? (Interrogative)
நீ எடுத்தாயா? (வினா நிலை)

★ ★ ★ ★

உ) They ate their dinner last night.
அவர்கள் கடந்த இரவு தமது இரவுணவை உண்டனர்.
(உடன்பாடு வாக்கியம் - Affirmative Sentence)

ஊ) Did they eat their dinner last night?
அவர்கள் கடந்த இரவு தமது இரவுணவை உண்டனரா?
(வினா வாக்கியம் - Interrogative Sentence)

★ They ate. (Affirmative)
அவர்கள் உண்டனர். (உடன்பாடு நிலை)

★ Did they eat? (Interrogative)
அவர்கள் உண்டனரா? (வினா நிலை)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தர்ஜினி மீண்டும் வலைப்பந்தாட்ட அணியில்



இலங்கை தேசிய வலைப்பந்தாட்ட அணியில் மீண்டும் தர்ஜினி இடம்பிடித்துள்ளார். ஆசியாவின் உயரமான வீராங்கனையாக கருதப்படுகின்ற இவர் கடந்த மூன்று வருடங்களின் பின்னரே, மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் சிங்கப்பூரில் நடைபெறவுள்ள 11 ஆம் ஆசிய வலைப்பந்தாட்ட போட்டிகளில் கலந்துகொள்ளவுள்ள இலங்கை அணியிலேயே தர்ஜினி இடம்பிடித்துள்ளார்.

முன்னதாக, இலங்கை தேசிய வலைப்பந்தாட்ட அணியில் இணைத் தலைவியாகவும் இடம்பெற்றிருந்த தர்ஜினி 2009 ஆம் ஆண்டில் ஆசிய வலைப்பந்தாட்ட செம்பியன் கிண்ணத்தை வெற்றிகொள்ள காரணகர்த்தாவாக இருந்தவராவார்.




# T20 உலகக் கிண்ண போட்டித் திகதி அறிவிப்பு



2020 ஆம் ஆண்டில் நடைபெறவேண்டிய T20 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளுக்கான திகதி அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, இப்போட்டிகள் 2020 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி தொடக்கம் நொவெம்பர் 15 ஆம் திகதிவரை நடைபெறவுள்ளது.

அவுஸ்திரேலியாவின் பிரதான நகரங்களில் நடைபெறவுள்ள T20 உலகக் கிண்ணப் போட்டிகளில் 16 நாடுகள் போட்டியிடவுள்ளன. இதில் மகளிர் பிரிவுப் போட்டிகள் அதே வருடத்தில் பெப்ரவரி மாதம் 24 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 08 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளமையும் இதில் 10 நாடுகள் கலந்துகொள்ளவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# ஸ்டொக்ஸ் மீண்டும் ஏலத்தில் முதலிடம்



இம்முறை ஐ பி எல் போட்டிகளுக்கான ஏலமிடலில் இங்கிலாந்து அணியின் பென் ஸ்டொக்ஸ் அடுத்தடுத்து இரண்டாவது தடவையாகவும் அதிக விலை கோரலைப் பெற்ற வீரர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். பென் ஸ்டொக்ஸுடன் அவரது அணியைச் சேர்ந்த இன்னும் 8 பேர் இந்த ஏலத்தின்மூலம் தெரிவாகியுள்ளனர்.

இம்முறை ஐ பி எல் ஏலத்தில் தெரிவாகாத வேகப்பந்து வீச்சாளர்களில் இலங்கை அணியின் லசித் மாலிங்க குறிப்பிடத்தக்கவராவார்.

# 19 வயதிற்குட்பட்ட உலகக் கிண்ணம் இந்தியா வசம்

19 வயதிற்குட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் இந்திய அணி செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றியுள்ளது.

இந்தியா-அவுஸ்திரேலியா அணிகளுக்கிடையே நடைபெற்ற இறுதிப் போட்டியில் அவுஸ்திரேலிய அணி 47.2 ஓவர்களில் 216 ஓட்டங்களை பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 38.5 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு வெற்றி இலக்கை அடைந்து கிண்ணத்தைக் கைப்பற்றியது.

19 வயதிற்குட்பட்ட உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டிகளில் நான்கு தடவைகள் செம்பியன் கிண்ணத்தைக் கைப்பற்றிய முதலாவது நாடு என்ற சிறப்பினை இந்திய அணி பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.




# டென்னிஸ் விளையாட்டில் பயன்படுத்தப்படும் பொருட்கள் சில....

டென்னிஸ் கெப்
Tennis Cap



டென்னிஸ் ரெக்கட்
Tennis Racket




கைமணிக்கட்டுப் பட்டி
Wrist band



டென்னிஸ் பந்து
Tennis Ball





ரீஷேர்ட்
T-Shirt

தலைப்பட்டி
Headband





காலுறை
Socks

காற்சட்டை
Short Trouser





வலை
Net



பாதணி
Shoe

Digitized by Noolaham Foundation.



இலங்கை பிரஜைகளின் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு உதவும் பிரதான ஆவணமாக தேசிய அடையாள அட்டை காணப்படுகின்றது. ஆட்பதிவுத் திணைக்களத்தினாலேயே அடையாள அட்டை விநியோகிக்கப்படுகின்றது. இந்த திணைக்களம் சுஹுருபாய, ஸ்ரீ சுபூதிபுர வீதி, பத்தரமுல்லை என்ற முகவரியில் அமைந்துள்ளது. 15 வயதுக்கு மேற்பட்ட அனைத்து பிரஜைகளுக்கும் இங்கிருந்துதான் அடையாள அட்டை விநியோகிக்கப்படுகின்றது.




## முதல் தடவையாக தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு தேவையான ஆவணங்கள்

★ தேசிய அடையாள அட்டையை முதன்முறையாகப் பெறுவதற்கு விண்ணப்பிப்பதாயின், சரியான முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம். (இதற்கு ஆட்பதிவுத் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற விண்ணப்பப்படிவத்தினை நீங்கள் முதலில் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த விண்ணப்பப்படிவத்தினை பத்தரமுல்லை - சுஹுருபாயவில் உள்ள ஆட்பதிவுத் திணைக்கள தலைமை அலுவலகம்/ பிரதேச செயலாளர்அலுவலகம்/ மாவட்ட செயலாளர் அலுவலகம்/கிராம சேவகர் அலுவலகம் போன்ற ஏதேனுமோர் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்).

★ பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட நகல் பிரதி.

★ உங்கள் இருப்பிடத்தை உறுதிப்படுத்தும் ஆவணம்.

★ 35 மி.மீ. அகலமும் 45 மி.மீ. நீளமும் கொண்ட 5 வர்ணப் புகைப்படங்கள் (பாடசாலை விண்ணப்பதாரியாயின் பாடசாலை சீருடையில் புகைப்படம் எடுக்கப்பட்டிருக்க வேண்டும்)

★ 50 வயதுக்கு குறைந்தவராயின் பிறப்பு அத்தாட்சிப் பத்திரம் அல்லது மேலதிக மாவட்டப் பதிவாளரினால் விநியோகிக்கப்படுகின்ற உத்தேச வயதுச் சான்றிதழ் அத்தியாவசியமாகும்.

★ வெளிநாட்டில் பிறந்தவராயின், இலங்கை பிரஜாவுரிமையைப் பெற்றமைக்காக, குடிவரவு- குடியகல்வு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட பிரஜாவுரிமை சான்றிதழ் மற்றும் அதன் நகல் பிரதி.

★ விண்ணப்பதாரி திருமணமானவராயின், கணவனின் பெயரை உள்ளடக்குவதற்கு திருமண சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.



## விண்ணப்பித்தல்

தேசிய அடையாள அட்டையைப் பெறுவதற்கு 3 வழிமுறைகளின்கீழ் விண்ணப்பிக்கலாம். அவையாவன:

★ தேசிய அடையாள அட்டையை முதல் தடவையாகப் பெற விண்ணப்பித்தல்.

★ திருத்தங்கள் செய்வதற்காக விண்ணப்பித்தல். அதாவது, ஏற்கெனவே உள்ள தேசிய அடையாள அட்டையில் ஏதேனும் மாற்றங்கள் செய்ய வேண்டி இருப்பின், இந்த முறையில் விண்ணப்பிக்க முடியும். பெயர், முகவரி மற்றும் இதர விபரங்களை இந்த முறையின்கீழ் திருத்திக்கொள்ளலாம்.

★ தேசிய அடையாள அட்டை காணாமல்போகும் பட்சத்தில் விண்ணப்பித்தல்.

## காணாமல்போன அடையாள அட்டைக்குப் பதிலாக புதிய அடையாள அட்டையைப் பெறுதல்

பல்வேறு காரணங்களினால் உங்கள் அடையாள அட்டை காணாமல்போகின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படலாம். இவ்வாறான சந்தர்ப்பங்களில் புதிதாக அடையாள அட்டையினைப் பெற விரும்பின் நீங்கள் பின்வரும் முறையில் விண்ணப்பிக்க முடியும்.

★ அடையாள அட்டை காணாமல்போன விபரத்தினை அருகில் உள்ள பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து, பொலிஸ் அறிக்கையின் மூலப் பிரதியினைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

★ அத்துடன், மீண்டும் அடையாள அட்டையைப் பெறுவதற்குத் தேவையான ஏனைய ஆவணங்களையும் உங்கள் பிரதேச கிராம சேவகரிடம் கையளிக்க வேண்டும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ம்மை அறிமுகப்படுத்த உதவும் தேசிய அடையாள அட்டை

## அடையாள அட்டையில் மாற்றங்கள் செய்ய வேண்டி இருப்பின்....

உங்கள் அடையாள அட்டையில் பெயர், முகவரி, தொழில் என்பனவற்றில் மாற்றங்கள் செய்ய வேண்டி இருப்பின், அவற்றை திருத்திக்கொள்வதற்கு விண்ணப்பப்படிவம் ஒன்று பூர்த்தி செய்யப்படல் வேண்டும். முதல் தடவையாக அடையாள அட்டையைப் பெறுவதற்கு நீங்கள் பயன்படுத்திய விண்ணப்பப்படிவத்தையே, இதன்போதும் பயன்படுத்த வேண்டும். அதனுடன் சமர்ப்பிக்க வேண்டிய இதர ஆவணங்கள் வருமாறு:

★ சரியான முறையில் நிரப்பப்பட்ட விண்ணப்பப்படிவம்

★ பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் உறுதிப்படுத்தப்பட்ட நகல் பிரதி

★ இறுதியாகப் பெற்றுக்கொண்ட தேசிய அடையாள அட்டை

★ உங்கள் இருப்பிடத்தை உறுதிப்படுத்தும் ஏதேனுமோர் ஆவணம்

★ அத்துடன், தொழில் விபரத்தை உள்ளடக்க வேண்டுமாயின், பட்டப்படிப்பு சான்றிதழ் மற்றும் சேவைச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட நகல் பிரதி என்பன அவசியமாகும். குறித்த சேவைச் சான்றிதழ் 6 மாதங்களுக்குள் பெறப்பட்டதாக இருக்க வேண்டும்.

## விண்ணப்பப்படிவத்தையும் ஆவணங்களையும் யாரிடம் சமர்ப்பிக்க வேண்டும்?

★ கிராம சேவகரிடம்

★ பாடசாலை விண்ணப்பதாரியாயின் பாடசாலை அதிபரிடம்.

★ தோட்டத் தொழிலாளியாயின் தோட்ட அதிகாரியிடம்.

★ விசேட தேவைகளின்போது நடமாடும் சேவைகள்மூலம் தேசிய அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுக்கும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் நடமாடும் சேவை நிலையங்களில் கையளிக்க முடியும்.







## புதிய அடையாள அட்டை

2016 ஜனவரி 1ஆம் திகதியிலிருந்து விநியோகிக்கப்பட்டு வருகின்ற தேசிய அடையாள அட்டை, 12 இலக்கங்களைக் கொண்டது. எனினும், இதற்கு முன்னர் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டையில் 9 இலக்கங்கள் மட்டுமே காணப்பட்டன.

## ஒரு நாள் சேவையினூடாக தேசிய அடையாள அட்டை பெறுதல்

ஒரு நாளில் தேசிய அடையாள அட்டையைப் பெற வேண்டுமாயின், அது குறித்து கிராம சேவகருக்கு கடிதம்மூலம் அறிவிக்க வேண்டும். பின்னர் விண்ணப்பப்படிவத்தினை சரியான முறையில் பூர்த்தி செய்து உரிய ஆவணங்கள் இணைக்கப்பட்டு, அவை யாவும் கிராம சேவகரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். பாடசாலை விண்ணப்பதாரியாயின் பாடசாலை அதிபரினால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும். அதனையடுத்து, பிரதேச செயலாளரினால் உறுதிப்படுத்தப்படுவது அவசியம். பின்னர் இவ்வனைத்து ஆவணங்களுடன் ஆட்பதிவுத் திணைக்களத்திற்கு நேரடியாக சென்று கையளிப்பதன்மூலம், உங்கள் தேவைக்கு ஏற்ப ஒரு நாள் சேவையினூடாக தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளலாம். ஒரு நாள் சேவையின்கீழ் அடையாள அட்டையைப் பெறுவதற்காக 1,000 ரூபா கட்டணம் அறவிடப்படுகின்றது.

## இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை

இலத்திரனியல் தேசிய அடையாள அட்டையினை விநியோகிப்பதற்கு ஆட்பதிவுத் திணைக்களம் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. இதன்மூலம் நாட்டில் வாழும் நபர்கள் குறித்து தரவுகளை சேமிக்கக்கூடியதாக இருக்கும். அத்துடன், சட்ட ரீதியிலான பிரச்சினைகளுக்கு தீர்வு காணலாம். மேலும், தேசிய பிரஜைகள் தரவுத் தொகுதியும் உருவாக்கப்படுவதோடு, தற்போதுள்ள தேசிய அடையாள அட்டைகள் தொடர்பான பல பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தேசிய குறியீடுகள்



## அரச இலச்சினை



பிரகடனப்படுத்திய தினம் - 1972 மே 23.

**குறியீடு உணர்த்துவது**

சிங்கம் - துணிச்சல்
நிறைகுடம் - சமுர்த்தி மற்றும் சௌபாக்கியம்
சூரியன் நிலவு - நித்தியகாலம்
தானியக் கதிர் - செழிப்பு
தர்மச் சக்கரம் - தார்மீகம்
தாமரை இதழ் - தூய்மை

## தேசிய கொடி



சிங்கக் கொடி

## தேசிய வண்ணத்துப்பூச்சி



பொதுப்பெயர் - ஸ்ரீ விலங்கின விஞ்ஞானப் பெயர் - *Troides darsius*

ஆங்கிலப் பெயர் - Sri Lanka Birdwing

நிறம் - கறுப்பும் மஞ்சளும்

தேசிய வண்ணத்துப்பூச்சியாக பிரகடனப்படுத்தல் - 2010 மார்ச் மாதத்தில்

## தேசிய விளையாட்டு



தமிழ் பெயர் - கரப்பந்தாட்டம்

ஆங்கிலப் பெயர் - Volley Ball

தேசிய விளையாட்டாக பிரகடனப்படுத்தியது - 1941 இல்

## தேசிய மலர்



பொதுப் பெயர் - நீலோற்பவம்


விஞ்ஞானப் பெயர் - *Nymphaea nouchali*

ஆங்கிலப் பெயர் - Water lily blue lotus

நிறம் - வெள்ளை நீலம் மற்றும் மஞ்சள்

தேசிய மலராகப் பிரகடனப்படுத்தியது - 1998 மார்ச் 04

## தேசிய மாணிக்கம்



நீல மாணிக்கம்

## தேசிய விருட்சம்



பொதுப் பெயர் - நாகமரம் (நாகை)

விஞ்ஞானப் பெயர் - *Mesua nagassarium*

ஆங்கிலப் பெயர் - Iron wood

தேசிய விருட்சமாக பிரகடனப்படுத்தியது - 1986 பெப்ரவரி 26

## தேசிய பறவை



பொதுப் பெயர் - இலங்கை காட்டுக்கோழி

விஞ்ஞானப் பெயர் - *Gallus lafayetii*

ஆங்கிலப் பெயர் - Sri lanka jungle fowl

நிறம் - சிவப்பு, மஞ்சள், கபில நிறம், கறுப்பு மற்றும் செந்நிறம் கலந்த நீல நிறம்

தேசிய பறவையாக பெயரிடப்பட்டது - 1986

noolaham.org | aavanaham.org



# நல்லவற்றையே உண்போம் நலமுடன் வாழ்வோம்...!

பெற்றோர்கள் பிள்ளைகளை ஆரோக்கியமானவர்களாக வளர்ப்பதற்கு பெரு முயற்சிகளை எடுக்கின்றனர். இதில் பிள்ளைகளுக்கான உணவு வேளை முக்கிய பங்கை வகிக்கின்றது.

எனவே, பிள்ளைகளாகிய நீங்களும் உங்களது உணவு வேளைகளில் எடுக்கும் உணவு வகைகளை சரியான முறையில் திட்டமிட்டு தெரிவுசெய்து கொள்வது மிகவும் முக்கியமானதாகும். அப்பொழுது தான் நீங்கள் ஆரோக்கியமாக வாழ்ந்து கல்வி நடவடிக்கைகளில் சிறந்த முறையில் ஈடுபட முடியும்.

## சிறு வயதில் வளர்ச்சி

சிறு வயதில் பிள்ளைகள் வேகமாக வளர்ச்சி அடைவதுண்டு. உடல் வளர்ச்சி அடையும்இக்காலகட்டத்தில் போஷாக்கு உணவின் அவசியம் மிகவும் அதிகம்.

சிறு வயது முதலே போசணை மிகு உணவுக்கு பழக்கப்பட வேண்டும். அதேபோல், வயது வந்தபின் ஆரோக்கியமாக வாழ இவ்வாறு போசணைமிகு உணவினை சிறு வயது முதலே உட்கொண்டிருத்தல் வேண்டும்.

## உணவை தெரிவு செய்யக்கூடாது

நீங்கள் சிறு வயதாக இருக்கும் பொழுது பெற்றோர்கள் உங்களின் உணவுகளில் எல்லாவிதமான காய்கறி வகைகளையும் சேர்த்திருந்தனர். எனினும், சிறிது சிறிதாக அறிவு வளர்ச்சியடைந்து விபரம் தெரியவந்தபோது நீங்கள் உணவு வகைகளை தெரிவுசெய்து உண்ண ஆரம்பித்தீர்கள் அல்லவா? பாடசாலை செல்லும் வயதில் சிலர் சில காய்கறிகளை உண்பதில்லை. பழவகைகள், இறைச்சி வகைகள், மீன் வகைகள் என்பனவற்றிலும் சிலவற்றை மாத்திரம் தெரிவுசெய்து உண்பர்.








## சீனி-உப்பு என்பனவற்றை குறைத்தால் நன்று


உங்கள் அம்மா நீங்கள் சிறு பிள்ளையாக இருக்கும்போது, உங்கள் உணவில் உப்பு, சீனி என்பனவற்றை சேர்க்க வில்லை என்பதை அறிந்திருப்பீர்கள். அதிக உப்பு மற்றும் இனிப்புச் சுவை மிகுந்த உணவை அதிகம் உண்பதால் வயது வந்த பின் நீங்கள் நீரிழிவு, இதயநோய், கொலஸ்ட்ரோல் (அதிக கொழுப்பு) அதிக களைப்பு உள்ளிட்ட பல நோய்களுக்கு ஆளாக இடமுண்டு.

## புரதம் அதிகம் தேவையான வயது

இப்பொழுது நீங்கள் பல்வேறு போசணைமிகு சத்துக்கள் நிறைந்த புரதம் அதிகம் தேவையான பருவத்தை அடைந்துள்ளீர்கள். அதனால், நீங்கள் மூன்று பிரதான உணவு வேளைகளிலும் இரண்டு சிறு உணவு வேளைகளிலும் உணவு உட்கொள்ள வேண்டும். எனினும், அதிகாலையிலேயே பாடசாலை செல்ல ஆயத்தப்படுத்துவதால் பலர் காலை உணவை உட்கொள்வதில்லை. பகலிலும் பாடசாலை முடிந்தவுடன் மேலதிக வகுப்புகளுக்கு அதாவது, டியூஷனுக்கு ஓடுவதால் பகல் வேளை உணவையும் உட்கொள்வதில்லை. களைப்படைந்து, சோர்வுடன், நித்திரைக் கலக்கத்தில் வீட்டுக்கு வருவதால் இரவு வேளை உணவையும் வேண்டா வெறுப்புடனேயே உண்பர். இச்செயலானது, உங்களை சில வருடங்களிலேயே நோயாளி நிலைக்கு ஆளாக்கிவிடும்.

## கல்சியம் மற்றும் இரும்புச்சத்து

கல்சியம் மற்றும்





இரும்புச்சத்தை சிறு வயது முதலே கண்டிப்பாக பெற வேண்டும். இவை நுண்போசணைப் பிரிவைச் சேர்ந்த உணவு வகைகளா கும். எதிர்காலத்தில் ஒஸ்டியோபோரோஸிஸ் நோயிலிருந்து எம்மை பாதுகாத்துக்கொள்ள கல்சியம் மற்றும் இரும்புச்சத்து அடங்கிய உணவு வகைகளை உணவில் கட்டாயம் சேர்க்க வேண்டும். அதனால், கல்சியம் அடங்கியுள்ள பால் மற்றும் பால் உணவுகள், முள்ளுள்ள மீன்கள், இரும்புச்சத்து அடங்கிய விலங்கு உணவுகள் (இறைச்சி, மீன்) மற்றும் பச்சை இலை/காய்கறிகள் என்பவற்றை உணவில் கண்டிப்பாக சேர்க்க வேண்டும்.

noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் 02




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய்

# அரச சிறுவர் ஓவிய விழா 2018

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு, கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச கட்புல கலை ஆலோசனைக் குழு ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள 'அரச சிறுவர் ஓவிய விழா -2018' தொடர்பாக ஜனவரி மாதம் 20 ஆம் திகதி தொடக்கம் மார்ச் 16 ஆம் திகதி வரை கொழும்பு-07 தேசிய கலா பவனத்தில் படைப்புக்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

* கிடைக்கப்பெறும் ஓவியங்களுள் ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 50 சிறந்த ஓவியங்கள் தெரிவுசெய்யப்பட்டு அவை இரண்டாம் சுற்றுப் போட்டிக்கு உட்படுத்தப்படும். இரண்டாம் சுற்றுக்கான போட்டிகள் விசேட பயிற்சிப் பட்டறையுடன் நடைபெறும்.
* முதலாம் சுற்றிலிருந்து தெரிவாகின்ற வெற்றியாளர்கள் அனைவருக்கும் அன்றைய தினம் பாராட்டுச் சான்றிதழ் வழங்கப்படும்.
* இரண்டாம் சுற்றில் தெரிவாகும் ஓவியங்கள் 'அரச சிறுவர் ஓவிய விழா 2018'இல் இறுதித் தெரிவிற்கு முன்வைக்கப்படும்.
* இறுதியாக வெற்றிபெறும் சிறுவர் ஓவியங்களுக்கு 'அரச சிறுவர் ஓவிய விழா' வைபவத்தின்போது, பரிசுகள், விருதுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

### போட்டிப் பிரிவுகள்

| | |
|---|---|
| ★ ஆரம்பப் பிரிவு | - வயது 05-06 |
| ★ முதுநிலை ஆரம்பப் பிரிவு | - வயது 07-09 |
| ★ கனிஷ்ட பிரிவு | - வயது 10-12 |
| ★ சிரேஷ்ட பிரிவு | - வயது 13-15 |
| ★ சிரேஷ்ட இரண்டாம் நிலைப் பிரிவு | - வயது 16-18 |

### போட்டி நிபந்தனைகள்

* உங்களுக்கு விருப்பமான எந்தவொரு தலைப்பிலும் ஓவியத்தை வரையலாம்.
* உங்களுக்கு விருப்பமான எந்த ரக நிறப்பூச்சையும் பயன்படுத்தலாம்.
* ஓவியம் 18x14 அங்குலம் அளவுடையதாக இருத்தல் வேண்டும்.
* ஒருவர் ஒரு ஓவியத்தை மாத்திரமே அனுப்ப முடியும்.
* அனுப்பப்படும் ஓவியம் இதற்கு முன்னர் வேறு எந்தவொரு போட்டிக்கும் அனுப்பப்பட்டதாக இருத்தல் கூடாது.
* உங்களுடைய நிரந்தர வதிவிட மாவட்டத்திலிருந்தே ஓவியத்தை அனுப்ப வேண்டும்.
* ஓவியங்கள் தகுதிவாய்ந்த நடுவர் குழுவிற்கு ஒப்படைக்கப்பட்டு அவற்றிலிருந்து தெரிவுசெய்யப்படும் வெற்றியாளர்கள் மாத்திரமே குறித்த மாவட்டத்தின் சார்பில் அடுத்த சுற்றிற்கு தெரிவாவர்.
* போட்டி நடைபெறும் திகதி, இடம், நேரம், ஆகியன பின்னர் அறிவிக்கப்படும்.
* ஓவியத்தின் பின்புறம் விபரங்கள் அனைத்தும் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் தெளிவாக எழுதுதல் வேண்டும். விபரங்கள் சரிவர வழங்கப்படாத படைப்புகள் போட்டிகளிலிருந்து நீக்கப்படும்.
* நீங்கள் அனுப்பும் ஓவியங்கள் எக்காரணம் கொண்டும் மீண்டும் உங்களுக்கு வழங்கப்பட மாட்டாது.

(விபரங்கள் வேறு தாளில் எழுதப்பட்டு ஓவியத்தின் பின்புறம் ஒட்டப்படுமாயின் அவை கழன்று விடாதபடி ஒட்டவும்)

### மாதிரி விண்ணப்பப் படிவம்

1. முழுப்பெயர் : ..............................
2. முதலெழுத்துடன் பெயர்: ..............................
3. பிறந்த திகதி: ..............................
4. 31/12/2017 திகதியின்போது வயது: ..............
5. போட்டிப் பிரிவு: ..............................
6. வதிவிட முகவரி: ..............................
..............................
..............................
7. நிரந்தர வதிவிட மாவட்டம்: ..............................
8. தொலைபேசி இலக்கம்: ..............................

பின்புறம் உள்ள ஓவியம் எனது சொந்தப் படைப்பு என்பதை உறுதிசெய்கிறேன்.

..............................

போட்டியாளரின் கையொப்பம்

**ஓவியங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:**
தேசிய ஒருங்கிணைப்பாளர்,
அரச கட்புல கலை ஆலோசனைகள் குழு,
தேசிய கலா பவன், ஆனந்த குமாரசாமி மாவத்தை,
கொழும்பு-07.
தொடர்புகளுக்கு - 011 2882551/ 011 2872031

**ஓவியம் அனுப்பப்பட வேண்டிய ஒழுங்குமுறை:**
சித்திரம் இடப்படும் கடித உறையிலோ அல்லது பொதியிலோ இடது மேல் முனையில் 'அரச சிறுவர் ஓவியப்போட்டி 2018' என குறிப்பிடவும்.



மேலதிக விபரங்களை 03.02.2017 ஆம் திகதி அரச வர்த்தமானியிலும் www.culturaldept.gov.lk எனும் இணையத்தளத்திலும் பார்வையிடலாம்.

## நல்ல மனிதனை தேடும் மன்னன்!

கதை, ஓவியம் எச்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூரியனிலிருந்து வெளியாகின்ற நச்சுக்கதிர்களில் இருந்து பூமியைப் பாதுகாக்கும் காவலன்தான் 'ஓசோன் படலம்'. எனினும், உலக மக்களின் பல்வேறு முறையற்ற நடவடிக்கைகளினால் ஓசோன் படலம் பாதிப்படைந்து வரத் தொடங்கியது. இதனையே 'ஓசோன் துவாரம்' என்று அழைக்கின்றனர்.

# ஓசோன் துவாரம் சுருங்கியுள்ளதாம்...!



ஓசோன் படலத்தில் துவாரம் ஏற்பட்டுள்ளதனால், சூரியனின் நச்சுக்கதிர்கள் அந்த துவாரத்தினூடாக பூமியை நேரடியாகத் தாக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் சுற்றாடல் பாதிப்புகள், இயற்கை சீர்கேடுகள், உயிரினங்களில் பாதிப்புகள் என பல்வேறு பிரச்சினைகள் தோன்றியுள்ளன. இதனையடுத்து, ஓசோன் படலத்தை பாதுகாக்கும் நடவடிக்கைகளை உலக நாடுகள் பல ஆண்டுகளாக முன்னெடுத்து வருகின்றன. இதன் விளைவாக, தற்போது ஓசோன் துவாரத்தின் அளவு சுருங்கியுள்ளதாக விண்வெளி ஆராய்ச்சியாளர்கள் உறுதிசெய்துள்ளனர்.




# கத்தரிக்காய்



இலங்கையையும் தென்னிந்தியாவையும் தாயகமாகக்கொண்ட மரக்கறி வகைதான் கத்தரிக்காய். இந்தப் பகுதிகளில் இருந்துதான் உலகின் ஏனைய நாடுகளுக்கும் கத்தரிக்காய் அறிமுகமாகியுள்ளது. இதில் பல வகைகள் உள்ளன. கத்தரிக்காய் பொதுவாக முட்டை வடிவத்தை ஒத்திருப்பதனால், இதனை ஆங்கிலத்தில் 'Eggplant' என்று குறிப்பிடுவர். எனினும், தென் ஆசியா மற்றும் தென் ஆபிரிக்க நாடுகளில் 'Brinjal' என்ற பெயரே வழக்கத்தில் உள்ளது.



சிறுவர்கள் தமது இதய ஆரோக்கியத்தைப் பேணுவதற்காக தினமும் ஒரு மணித்தியாலமேனும் ஓடி விளையாடுவது நல்லது.



# பம்பரகந்த நீர்வீழ்ச்சி

இலங்கையின் உயரமான நீர்வீழ்ச்சியாக 'பம்பரகந்த நீர்வீழ்ச்சி' கருதப்படுகின்றது. இந்த நீர்வீழ்ச்சி 263 மீற்றர் உயரம் கொண்டது. இது 'பம்பரகெலே நீர்வீழ்ச்சி' என்றும்



அழைக்கப்படுகின்றது. பதுளை மாவட்டத்தின் கலுபஹன எனும் இடத்திலேயே இந்த நீர்வீழ்ச்சி அமைந்துள்ளது. உலகின் உயரமான நீர்வீழ்ச்சிகளில் இது 299 ஆவது இடத்தில் உள்ளது.

# சிறப்பு மிக்க பறவை

பறவைகளில் மிகப் பெரியது 'தீக்கோழி' ஆகும். இதனை 'நெருப்புக்கோழி' என்றும் அழைப்பர். உலகில் வாழ்ந்து வருகின்ற பழமையான பறவையினமாக தீக்கோழி கருதப்படுகின்றது. அத்துடன், உலகிலுள்ள பறவையினங்களில் மிகவும் எடைகூடியதும் உயரமானதுமான பறவையினமும் தீக்கோழி ஆகும். மேலும், மிகப் பெரிய முட்டை இடும் பறவையும் இதுவாகும். பறவையினமானாலும் தீக்கோழியால் பறக்க முடியாது. ஆனால், வேகமாக ஓடக்கூடிய ஆற்றலை அது பெற்றுள்ளது.





இப்பத்திரிகை கொழும்பு -2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2018, பெப்ரவரி 14, புதன்கிழமைஅச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday February 14 , 2018.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org